**காத்தான்குடி நகர சபை**
**மட்டக்களப்பு மாவட்டம்**
-----------------------------------------

1. **நிதிக்கூற்றுக்கள்**

1.1 **நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்**

2018 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 28 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2019 ஆம் ஆண்டு மே 08 ஆந் திகதி தவிசாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

1.2 **முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து நிதிக்கூற்றுக்களில் 2018 ஆம் ஆண்டு திசெம்பர் 31 இல் நகர சபையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றிலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2.1 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரை

1.3 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

1.3.1 கணக்கீட்டு கொள்கைகள்

1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்கீட்டுக் குறைபாடுகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) நகர சபையின் அதிகார எல்லைக்குள் உள்ள 12 வட்டாரங்களில் 2015 ஆம் ஆண்டு சோலைவரி மதிப்பீடு செய்யப்பட்டுள்ள போதிலும், ஆதன பெறுமதி மதிப்பீடு தொடர்பாக மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு அடையாளப்படுத்தப்பட ாததன் காரணமாக ஆதன மதிப்பீடு முறையாக | சோலைவரி மதிப்பீடு உரிய காலப்பகுதியில் மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு மதிப்பீடு திணைக்களத்திற்கு அனுப்பப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.. |

| | | |
|---|---|---|
| மேற்கொள்ளப்பட்டிருக் கவில்லை. | | |
| ஆ. நகர சபையினால் மீளாய்வாண்டின் இறுதி வரை மாகாண திறைசேரி திணைக்களத்திடமிருந்து ஆதனங்களை கைமாற்றல், சீதனம் மற்றும் நன்கொடைகள் மீது அறவிடப்பட வேண்டிய முத்திரை தீர்வையானது முறையாக கணீப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் முத்திரை தீர்வையாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | முத்திரை தீர்வையானது சரியாக மதிப்பீடப்பட்டு அவை நிதிக்கூற்றுக்களுக்கு கொண்டுவரப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. |
| இ. நகர சபைக்கு சொந்தமான மோட்டார் வாகனங்கள் வண்டிகள் மற்றும் பிற அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் வழங்கப்பட்ட மோட்டார் வாகனங்கள் சபையினால் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இவற்றுள் சபைக்கு சொந்தமான மோட்டார் வாகனங்கள் வண்டிகளின் பெறுமதிகள் 05 ஆண்டுகளுக்கு மேலாக கணிப்பீடப்படாது அல்லது மீள்மதிப்பிடப்படாது கணக்குகளில் ரூபா 27,145,214 தொகையாக காட்டப்பட்டுள்ளது. | ஒவ்வொரு ஆண்டும் சபைக்கு சொந்தமான பிற அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட மோட்டார் வாகனங்கள் மற்றும் வண்டிகளின் பெறுமதிகள் மீள்மதிப்பிடப்பட்டு கணக்குகளில் காட்டப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. |

1.3.3 நிகழத்தக்க பொறுப்புகள்

----------------------------------

| | | |
|---|---|---|
| சபையினால் 2014 தொடக்கம் மீளாய்வாண்டு வரை வெளித்தரப்பினருக்கு எதிராக 05 | சபையால் முன்னெடுக்கப்படும் வழக்கு தொடர்பாக நிகழத்தக்க பொறுப்பு கணக்குகளுக்கு | ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | வழக்கு தொடரப்பட்டிருந்ததுடன், இவை தொடர்பாக நிதியேற்பாடுகள் ஏதும் நிகழத்தக்க பொறுப்பாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | காட்டப்பட வேண்டும். | |

1.3.4 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

---

(அ) பெறவேண்டிய கணக்குகள்

| | | | |
|---|---|---|---|
| 01. | நிதிக்கூற்றுக்களில் நிலுவையாக உள்ள மின்சார சபை முற்பணங்கள் ரூபா 2,399,352 தொகை தொடர்பில் தொடர்ச்சியாக பத்து ஆண்டுகளுக்கு மேலாக கணக்குகளில் காட்டப்பட்டுள்ள போதிலும், அவை தொடர்பான ஆவணங்கள், பதிவேடு மற்றும் உறுதிப்படுத்தக்கூடிய சான்றுகள் எதுவுமின்றி கணக்குகளில் காட்டப்பட்டு வருவதுடன் நிலுவைகளை அறவிட அல்லது ஏடுகளிலிருந்து பதிவழிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 1986 ஆண்டிலிருந்து காட்டப்படும் முற்பணம் தீர்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. |
| 02. | ஓய்வு பெற்ற, வேலையை விட்டுச் சென்ற மரணமடைந்த 4 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 39,276 கடன் மீதியை ஓய்வூதியத்திலிருந்து அல்லது பிணையாளியிடமிருந்து அறவிடுவதற்கு மீளாய்வாண்டு இறுதி வரை நடைவடிக்கை எடுக்கப்படவில்லை. | ஓய்வு பெற்ற உத்தியோகத்தரிடம் இருந்து கடன் நிலுவையினை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது |

(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்

| | | |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் கடன் பொறுப்பாக காட்டப்பட்டுள்ள செலவுக் கடன் வழங்குனர் ரூபா 6,642,879 பல வருடங்களாக இனங்கண்டு அவற்றை தீர்ப்பதற்கு அல்லது அவற்றை பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 1986 ஆம் ஆண்டிலிருந்து செலுத்த வேண்டிய ரூபா 6,642,879 சீர் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. |

1.3.5 ஆவணச்சான்றுகள் இன்மை

நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்ட பின்வரும் ஒவ்வொரு விடயத்திற்கும் எதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| விடயங்கள் | பெறுமதி ரூபா | சான்றுகளின்மை | | |
|---|---|---|---|---|
| மின்சார களஞ்சிய பொருட்களின் இருப்புக்கள் | 2,639,987 | இருப்புப் பதிவேடுகள் | மின்சார களஞ்சிய பொருட்கள் களஞ்சிய இருப்பு பதிவேட்டில் பதியப்படுத்தல் வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. |

1.4 இணக்கமின்மைகள்

14.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) நகர சபை கட்டளைச் சட்டம் (பிரிவு 255 ) | சட்டவிரோதமாக அங்கீகாரமின்றி அமைக்கப்பட்ட கட்டடங்கள் இனம் காணப்பட்டு அவற்றுக்கெதிராக நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | சுட்ட விரோத கட்டடங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | | | |
| (i) நிதிப்பிரமாண இலக்கம் 371 | 32 வகையான ரூபா 3,309,693 பெறுமதியான பல்வேறு நபர்களுக்கு 2011 ஆம் ஆண்டு தொடக்கம் 2018 வரை வழங்கப்பட்ட முற்பணங்கள் சீர் செய்யப்பட்டு இருக்கவில்லை. | சீர் செய்யப்படாமல் காணப்படும் முற்பணங்கள் முறையாக சீர் செய்யப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. |
| | சபையினால் வழங்கப்பட்ட 33 வகையான ரூபா 3,855,339 பெறுமதியான முற்பண கொடுப்பனவுகள் நீண்ட காலமாக சீர் செய்யப்படாமல் மீளாய்வாண்டின் இறுதிக்காலப் பகுதி வரை காணப்படுவதுடன் இவற்றில் ரூபா 245,645 அடையாளம் காணப்படாததாக காணப்படுகின்றது. | முற்பண கொடுப்பனவுகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது |
| (ii) நிதிப்பிரமாண இலக்கம் 571 | 17 வகையான ரூபா 2,408,199.57 பெறுமதியான காலம் கடந்த வைப்புக்களுக்கு நடவடிக்கை எடுக்கப்படாது 2014 ஆம் ஆண்டு தொடக்கம் மீளாய்வாண்டு இறுதி வரை காணப்படுகிறது | 2014 ஆம் ஆண்டு தொடக்கம் காட்டப்படும் காலம் கடந்த வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். | |
| இ. அரசாங்க நிர்வாக சுற்று நிருபம் | | | |
| 2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய 09/2009 சுற்று நிருபம் பிரிவு IV | ஊழியர் உள் வரும் மற்றும் வெளிச் செல்லும் கைவிரல் அடையாளம் அடிப்படையில் மேலதிக நேரம் மற்றும் விடுமுறைகள் | | |

சம்பளம் போன்றன வழங்கப்பட வேண்டிய போதிலும் இவற்றினை கருத்தில் கொள்ளாமல் ரூபா 32,648 தொகை மீளாய்வாண்டில் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது.

### 1.4.2 வரித் தேவைப்பாடுகளுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| உள்நாட்டு இறைவரி திணைக்களத்தால் வெளியிடப்பட்ட 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க பெறுமதி சேர்க்கப்பட்ட வரி சட்டத்தின் 20 ஆம் பிரிவு மற்றும் பெறுகைகள் வழிகாட்டி 5.4.11 பிரிவுகளில் தெரிவிக்கப்பட்டதன் அடிப்படையில் ஒரு வழங்குனர் அல்லது ஒப்பந்தக்காரர் பெறுமதி சேர்க்கப்பட்ட வரி கோருகின்ற போது அவரால் ''வற் பற்றுச்சீட்டு'' (VAT Invoice) சமர்ப்பிக்குமிடத்து அவருக்கு பெறுமதி சேர்க்கப்பட்ட வரி செலுத்தமுடியும். மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களின் வெவ்வேறுபட்ட வழங்குனர்களுக்கு பெறுமதி சேர்க்கப்பட்ட வரியாக கொடுப்பனவு செய்யப்பட்ட போதிலும், அவ்வழங்குனர்களிடமிருந்து ''வற் பற்றுச்சீட்டு'' (VAT Invoice) பெறப்பட்டிருக்கவில்லை. அத்துடன் செலுத்தப்பட்ட பெறுமதி சேர்க்கப்பட்ட வரி தொடர்பில் உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கும் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. | வெற் பற்றுச்சீட்டு வழங்குனரினால் சமர்ப்பிக்கப்படும் இடத்து அவருக்கு பெறுமதி சேர் வரி செலுத்தப்பட முடியும். | ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. |

## 2 நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 12,689,496 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும்

செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 11,504,832 தொகையாக ஆக இருந்தமை நிதிவிளைவுகளில் ரூபா 1,184,664 முன்னேற்றத்தை காட்டுகின்றது

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| விபரம் | மதிப்பிடப்பட்ட வருமானம் ரூபா | பட்டியலிடப்பட்ட வருமானம் ரூபா | சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா | 31.12.2018 நிலுவைகள் ரூபா | மதிப்பிடப்பட்ட வருமானம் ரூபா | பட்டியலிடப்பட்ட வருமானம் ரூபா | சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா | 31.12.2017 நிலுவைகள் ரூபா |
|---|---|---|---|---|---|---|---|---|
| வீதவரியும் வரியும் | 18,409,850 | 18,359,223 | 14,662,263 | 3,696,960 | 18,522,000 | 17,404,255 | 13,072,336 | 4,331,919 |
| வாடகைகள் | 7,501,500 | 5,562,342 | 5,662,342 | -- | 5,882,550 | 5,511,740 | 5,511,740 | -- |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 3,060,000 | 3,110,940 | 3,090,140 | 20,800 | 2,560,000 | 2,989,600 | 2,970,100 | 19,500 |
| ஏனைய வருமானம | 26,389,500 | 25,487,741 | 25,487,741 | -- | 24,414,200 | 14,387,750 | 14,387,750 | -- |

### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாகக் காணப்பட்ட ஆதன வரி நிலுவை (வருமான தலைப்பு 10311A ) ரூபா 8,461,187 இல் மீளாய்வாண்டில் ரூபா 4,452,695 வீதவரியை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஆதனவரி நிலுவை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. |
| (ஆ) மீளாய்வாண்டில் உண்டியல் படுத்தப்பட்ட ஆதன வரி (வருமான தலைப்பு 10311) ரூபா 16,929,108 இல் மீளாய்வாண்டு இறுதி வரை ரூபா 3,696,960 வீதவரியை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஆதனவரி நிலுவை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டிற்கு முன்னைய ஆண்டின் இறுதியில் அறவிடப்பட வேண்டிய விபயாபர உரிமைக் கட்டணம் ரூபா 19,500 ஆக காணப்பட்ட போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வியாபார உரிமைக் கட்டணம் அறவிடப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. |

2.2.3 JCB இயந்திரத்தின் பயன்பாடு
-----------------------------------------------

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நகர சபையினால் இவ்வியந்திரத்தை கொள்வனவு செய்வதற்கு போதிய நிதி இன்மையால் 2013 ஒக்டோபர் 10 ஆந் திகதி சபையானது உள்ளூர் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் கீழ் கடன் பெற்று, JCB இயந்திரத்தை கொள்வனவு செய்ய முடிவெடுக்கப்பட்டு கடன் நிதியின் மூலம் ரூபா 11,900,000 தொகையை கொண்டு சபையின் வருமானத்தை அதிகரிக்கும் நோக்குடன் இவ்வியந்திரம் கொள்வனவு செய்யப்பட்ட போதிலும், சபையானது இவ்வியந்திரத்தை பயன்படுத்துவதன் மூலம் நட்டத்தையே எதிர்நோக்கியுள்ளது. | JCB இயந்திரமானது சபையினால் நட்டம் ஏற்படாத வகையில் பயன்படுத்தப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. |
| (ஆ) | நகர சபைக்கு வருமானத்தை உழைக்கும் இரு JCB இயந்திரத்தின் மூலம் சபை வேலைகள் உட்பட பாடசாலைகள், மதஸ்தலங்கள், பொதுநிறுவனங்கள் மற்றும் அரச திணைக்களங்கங்களுக்கென 832.7 இயந்திர மணித்தியாலங்கள் இச்சேவையை இலவசமாக வழங்கியுள்ள போதிலும் பயன்படுத்திய மணித்தியாலத்திற்காக JCB இன் ஓட்டப் பதிவேட்டில் (Running | பொது ஸ்தாபனங்களுக்கு JCB இயந்திரத்தினை பயன்படுத்தும் போது உரிய அதிகாரிகளால் ஓட்டப் பதிவேட்டில் (Running Chart) உறுதிப்படுத்தல் வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | Chart) உரிய உத்தியோகத்தர்களினால் ஒப்படமிடப்படாததினால் இவற்றினை பயன்படுத்திய நோக்கத்தினை உறுதிபத்படுத்த முடியாமல்லிருந்தது. இதனால் சபைக்கு வருமானம் இழப்பாக ரூபா 2,498,100 தொகை ஏற்பட்டுள்ளது | | |
| (இ) | நகர சபையானது மீளாய்வாண்டில் இவ்வியந்திரங்களை 969.2 இயந்திர மணித்தியாலங்கள் பயன்படுத்தியுள்ளன. இதனடிப்படையில் எரிபொருள், இயந்திர திருத்தம், சாரதி சம்பளம் மற்றும் இயந்திரத்தின் கடன் மீளச்செலுத்தல் என்பன அடங்கலாக ரூபா 1,880,690 தொகை செலவிடப்பட்டுள்ளது. சபை வேலைகள் தவிர்ந்த ஏனைய வேலைகளுக்காக இவ்வியந்திரம் 136.5 இயந்திர மணித்தியாலங்கள் பயன்படுத்தப்பட்டதினால் ரூபா 409,500 தொகையை மாத்திரம் உழைத்துள்ளது. இச்செயற்பாட்டினை ஆய்வு செய்தால் வருடாந்தம் சபையானது ரூபா 1,471,190 தொகையை அண்ணளவாக இழக்கவேண்டி ஏற்படலாம். | JCB இயந்திரத்தின் பாவனை அவற்றின் பராமரிப்பு செலவின் ஈடுசெய்யக்கூடியதாக இருத்தல் வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது |
| (ஈ) | சபையின் அனுமதியின்றி மீளாய்வாண்டில் இவ்வியந்திரம் தனியார் வேலைகளுக்கென 136.5 இயந்திர மணித்தியாலங்கள் பயன்படுத்தப்பட்ட போதிலும், அவற்றுக்கான வருமானங்கள் அறவிட நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | தனியார் வேலைக்காக JCB பயன்படுத்துவது தொடர்பாக சபை நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. |

### 2.3.4 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் தீர்வைகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதம செயலாளர் மற்றும் அனைத்து அதிகாரிகளிடமிருந்து | சபைக்கு கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் | ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 6,052,504 தொகையான முத்திரைக் கட்டணம் பெறவேண்டியிருப்பதுடன் மற்றும் நிலுவையான நீதிமன்ற தண்டப்பணத் தொகையினை கணிப்பீடு செய்து கணக்குகளில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | கணீப்பீடு செய்து திறைசேரியிடமிருந்து பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | |
| (அ) முத்திரை தீர்வைகள் | | |
| நகர சபை அதிகார எல்லைக்குள் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அசைவற்ற காணிகள் கைமாற்றல்கள் மீதான முத்திரைத் தீர்வையை மட்டக்களப்பு மற்றும் கல்முனையில் அமைந்தள்ள மாவட்ட காணிப் பதிவாளர் திணைக்களத்தால் சேகரிக்கப்பட்டு கிழக்கு மாகாண திறைசேரியின் வருமானவரித் திணைக்களத்திற்கு செலுத்தப்பட்ட முத்திரை தீர்வையை உள்ளூராட்சி சபைகள் பெற்றுக்கொள்வது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | சபைக்கு கிடைக்க வேண்டிய முத்திரை தீர்வை கணீப்பீடு செய்து திறைசேரியிடமிருந்து பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. |
| (i) கிழக்கு மாகாண சபையின் 2010 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க முத்திரை தீர்வை மாற்றல்கள் பிரிவு 03 இற்கு அமைய வருடாந்தம் முத்திரைத் தீர்வை அறவிடப்படவேண்டிய போதிலும், 2018 ஆம் ஆண்டு ஜனவரி தொடக்கம் திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்குரிய முத்திரைத் தீர்வைகள் நகர சபையினால் கணக்கிடப்பட்டு பதிவாளர் நாயகத்திடமிருந்து உரிய காலத்திற்குள் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சபைக்கு கிடைக்க வேண்டிய முத்திரை தீர்வை கணீப்பீடு செய்து திறைசேரியிடமிருந்து பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. |
| (ii) கிழக்கு மாகாண இறைவரித் திணைக்களத்தால், கிழக்கு மாகாண சபைகள் 2008 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க | சபைக்கு கிடைக்க வேண்டிய முத்திரை தீர்வை கணீப்பீடு செய்து திறைசேரியிடமிருந்து பெற்றுக் கொள்வதற்கான | ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | வரிகளையும் கட்டளைகளையும் விதிப்பதற்கும் சேகரிப்பதற்குமான நிதிநியதிச் சட்டத்தின் 37 ஆம் சரத்துக்கமைய நகர சபையின் அதிகார எல்லைக்குள் உள்ள அசைவற்ற ஆதனங்களை மாற்றுகையில் கிழக்கு மாகாண இறைவரித் திணைக்களத்தினால் 2016, 2017 மற்றும் 2018 திசெம்பர் மாதம் வரையான காலப்பகுதியில் நேரடியாகவும் நடமாடும் சேவைகள் மூலமாகவும் அறவிட்ட மேலதிக முத்திரை தீர்வை தொடர்பில் ஆதன உரிமையாளர்களால் கிழக்கு மாகாண இறைவரி திணைக்களத்திற்கு செலுத்தப்பட்ட முத்திரை தீர்வை கணக்கிடப்பட்டு அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | |
| (iii) | முத்திரை தீர்வையானது நகர சபைக்கு கிடைக்கவேண்டிய வருமானமாகும். இருந்தும், 2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கிழக்கு மாகாண இறைவரி திணைக்களத்தினால் மேலதிகமாக அறவிடப்பட்ட முத்திரை தீர்வை கணக்கிடப்பட்டு கணக்காய்வுத் திகதியான 28 மார்ச் 2019 வரை நகர சபைக்கு கிடைக்கப் பெறவில்லை. இதனால், மேலதிக முத்திரை தீர்வை மற்றும் காணி விற்பனை தீர்வை வருமானங்கள் வருடா வருடம் கிடைக்கப்பெறாது இழக்கப்படுகின்றன. | சபைக்கு கிடைக்க வேண்டிய முத்திரை தீர்வை கணீப்பீடு செய்து திறைசேரியிடமிருந்து பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. |
| (iv) | நகர சபையினால் கணக்கீடப்பட்டு 2017 மற்றும் 2018 யூன் மாதம் வரையிலான காலப்பகுதியில் கைமாற்றப்பட்ட, சீதனம் மற்றும் நன்கொடைகள் மூலம் உரிமைமாற்றம் செய்யப்பட்ட அசைவற்ற ஆதனங்களின் மீதான முத்திரை தீர்வைத் வருமானமாக கிழக்கு மாகாண திறைசேரியினால் நிர்வாக செலவுகளுக்கொன | சபைக்கு கிடைக்க வேண்டிய முத்திரை தீர்வை கணீப்பீடு செய்து திறைசேரியிடமிருந்து பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. |

அறவிடப்பட்ட 1% சதவீதமான மாவட்ட உதவி காணிப் பதிவாளர் நாயகத்திற்கு செலுத்திய தொகை கணக்கிடப்பட்டு செலுத்தப்பட்டதாக மீளாய்வாண்டிற்கான கணக்குகளில் காட்டப்பட்டிருக்கவில்லை.

3 செயற்பாட்டு மீளாய்வு

3.1 செயலாற்றல்

நகர சபைகள் அதிகாரச்சட்டத்தின் பிரிவுகளின் பிரகாரம், பொதுச் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வழிகள், மற்றும் மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) நகர சபை கட்டளைச் சட்டத்தின் அத்தியாயம் 255 பிரகாரம், நகர சபையின் வருமானம் மற்றும் ஒழுங்கமைப்புக்காக முக்கிய விடயங்கள் தொடர்பில் உபவிதிகள் தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படத்தப்பட்டிருக்க வேண்டும். இருந்த போதிலும் நகர சபையினால் உப விதிகள் தொடர்பான பிரேரணைகள் கிழக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சரின் அங்கீகாரத்திற்கு 2014 ஆம் ஆண்டு அனுப்பப்பட்ட போதிலும், 2018 திசெம்பர் 31 வரையிலும் அவற்றிக்கான அனுமதியைப் பெற்று நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நகர சபை கட்டளைச் சட்டத்தின் அத்தியாயம் 255 பிரகாரம் உப விதிகள் தயார் செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். | நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. |

(ஆ) நோக்கங்களிலிருந்து விலகிய செயற்பாடுகள்

---------------------------------------------------

காத்தான்குடி நகர சபையின் கீழ் இயங்கும் மடுவ கழிவு நீர் அகற்றல் முறைமை திட்டத்தினை நடைமுறைப்படுதத்தி உயிர் வாயு உற்பத்தி செய்வதற்கு 2012 ஆம் ஆண்டு ரூபா 10,446,427 மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு குறிப்பிட்ட நிர்மாண நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக ஷாமில் ஒப்பந்த நிறுவனத்துடன் ரூபா 8,580,000 க்கு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு 2015 ஆம் ஆண்டு காலப்பகுதி வரை மொத்தமாக ரூபா 8,151,000 கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இச் செயற் திட்டத்தினை முறையாக நடைமுறைப்படுத்தி அதில் வெளியாகும் உயிர்வாயு நிலை செயற்திட்ட முன்மொழிவில் குறிப்பிட்டவாறு பொது மக்களுக்கு விநியோகிக்கப்படாமல் திறந்த வெளியில் அகற்றப்படுவதானது விலங்கறுமனை நடவடிக்கை 25.01.2018 ஆம் திகதிய 1533/16 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தலில் அட்டவணை பாகம் (அ) வினுள் நிரற்படுத்தப்பட்டுள்ளது. மேலும் 1988 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க சட்டத்தினாலும், 2000 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க சட்டத்தினாலும், திருத்தப்பட்ட 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் படி சுற்றாடல் பாதுகாப்பு உரிமமின்றி விலங்கறுமனையை நடாத்துவது தண்டணைக்குரிய குற்றமாகும் என மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட விடயங்களின் அடிப்படையில் குறிப்பிட்ட செயற்திட்டமானது முறையாக நடைமுறைப்படுத்தப்படாததினால் காத்தான்குடி நகரசபை எல்லைக்குள் விலங்கறுமனை கொண்டு நடாத்துவது சூழலை பாதிப்பதால் அங்கு வாழும் மக்களும் பிரச்சனையை எதிர்நோக்க வேண்டி வரும் சூழ்நிலையினை தோற்றுவிப்பதாக இது

மடுவ கழிவு நீர் அகற்றல் திட்டதினை நடைமுறைப்படுத்தி உயிர் வாயு உற்பத்தியினை மேற் கொண்டு அவை பொது மக்களின் பயன்பாட்டிற்காக வழங்கப்பட வேண்டும்.

குறிப்பிட்ட திட்டத்தின் முழுமையான உபயோகம் இன்னும் இரு வருடத்தில் நிறைவடையவுள்ளது.

| | | |
|---|---|---|
| காணப்படுகின்றது. | | |
| (இ) திண்மக் கழிவு முகாமைத்துவம் | | |
| திண்மக்கழிவு முகாமைத்தும் தொடர்பில் சபையினால் மேற்கொள்ளப்பட்ட நீண்டகால மற்றும் குறுங்கால செயற்திட்டங்களுக்கென மீளாய்வாண்டில் ரூபா 5,847,951 தொகை செலவினம் மேற்கொள்ளப்பட்ட போதிலும், சபையின் வருமானமாக ரூபா 2,119,608 தொகை பெறப்பட்டுள்ளது. இவ்திண்மக்கழிவு முகாமைத்துவம் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | திண்மக்கழிவு முகாமைத்துவத்திற்கான திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. |
| (i) சபையினால் திண்மக்கழிவு முகாமைத்துவத்திற்கென திட்டம் தயாரிக்கப்பட்டு, செயற்படுத்தப்படாமையினால் சபையினால் சாரதிகள், திண்ம கழிவுகளை சேகரிப்பதற்கான வாகனங்கள், சுகாதார தொழிலாளிகள் போன்றவற்றை அதிகரித்தல் மற்றும் கிராமங்களில் சுற்றுச் சூழல் பாதுகாப்பு குழுக்களை உருவாக்கி அதன் ஊடாக திண்மக்கழிவு முகாமைத்துவத்தை அபிவிருத்தி செய்யும் நடைவடிக்கைகள் இதுவரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | |
| (ii) சபையின் அதிகாரத்திற்குட்பட்ட பகுதிகளில் உள்ள வீடுகள், நிறுவனங்கள், கடைகள் மற்றும் பொது இடங்களில் இருந்து குப்பைகளை தரம்பிரித்து சேகரிக்கின்ற பணிகள் மக்களின் அசட்டையீனம் மற்றும் கவலையீனம் காரணமாக முழுமையாக செயற்படாத காரணத்தினால், திண்ம கழிவு முகாமைத்துவத்தினால் சபை சேதன பசளை உற்பத்தி மற்றும் மிள்சுழற்சி விற்பனை போன்ற திட்டங்களை மாத்திரம் செயற்படுத்தி வருகின்றது. இருந்தும், இவற்றை தவிர வேறு | வருமானத்தை உருவாக்கும் திட்டம் முன்மொழியப்பட வேண்டும்இ | ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. |

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| | வகையில் வருமானத்தை உருவாக்கும் திட்டங்கள் முன்மொழியப்பட்டிருக்கவில்லை. | | |
| (iii) | காத்தான்குடி நகர சபையினால் சேகரிக்கப்பட்ட 336 Load திண்மக்கழிவுகளை திண்மக்கழிவு சேகரிப்பு நிலையத்திலிருந்து கொடுவாமடுவுக்கு கொண்டு செல்லும் பொருட்டு வாடகைக்கு அமர்த்தப்பட்ட டிப்பர்களுக்கு ரூபா 1,785,500 கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதற்கான கூறுவிலை கோரலின் போது சந்தையில் 01 Load க்கு ரூபா 4,500 விலையில் 03 நபர்கள் டிப்பர் வாகனத்தினை வாடகைக்குத் தர இருந்த போதிலும் அவற்றினை கவனத்தில் கொள்ளாமல் 283 Loadக்கு ரூபா 5,500 வீதம் ரூபா 1,556,500 கொடுப்பனவு செய்யப்பட்டமையினால் சபைக்கு ரூபா 283,000 மேலதிக செலவீனம் ஏற்பட்டுள்ளது. | திண்மக்கழிவுகளை திண்மக்கழிவு சேகரிப்பு நிலையத்திற்கு கொண்டு செல்வதற்கான வாகன வாடகை கேள்வி நடைமுறை அடிப்படையில் மேற்கொள்ளப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. |
| (v) | காத்தான்குடி நகர சபையினால் 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 மார்ச் 07 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கான சேதனப்பசளை உற்பத்தி, விற்பனை அலகுகளை பரிசீலனை செய்த போது 3,275Kg சேதனப்பசளை குறைவு அவதானிக்கப்பட்டது. | சேதன பசளை உற்பத்தி தொடர்பாக முறையான பதிவு மேற்கொள்ளப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. |

ஈ. நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஐக்கிய நாடுகளின் அமைப்பின் அங்கத்துவ நாடுகளின் அரச தலைவர்களின் தலைமையில் 2015 ஆம் ஆண்டு நிலைபேறான அபிவிருத்தி மகாநாட்டில் தீர்மானிக்கப்பட்டதன் பிரகாரம் சபையினால் 2030 ஆம் ஆண்டில் அடைந்து கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் | அபிவிருத்தி நிகழ்சிசி நிரல் தொடர்பாக அளவிடுவதற்கான குறிகாட்டிகள் உருவாக்கப்பட வேண்டும். | மேற்படி விடயம் தொடர்பாக போதிய தெளிவின்மை காரணமாக நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் தொடர்பாக அறவிடுவதற்கான குறிகாட்டிகளை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |

| | | |
|---|---|---|
| தொடர்பாக அளவிடுவதற்கான குறிகாட்டிகளை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| உ. LGIP கடன் திட்டத்தின் கீழ் நகர சபை எல்லைக்குள் உள்ள வீதிகள் மற்றும் வடிகால்களினை அபிவிருத்தி செய்யும் நோக்கத்திற்காக 09 வீத வருடாந்த வட்டியுடன் 10 வருடத்தில் செலுத்துவது என்ற அடிப்படையில் ரூபா 7,317,456 கடன் பெறப்பட்டு மீளாய்வாண்டு தொடக்கம் 2021 ஆம் ஆண்டு வரை வட்டி செலுத்தப்பட வேண்டி இருந்த போதிலும் குறிப்பிட்ட வீதிகள் முறையாக சீர் செய்யப்பட்டு பேணப்படாமல் காணப்படுகின்றது. | LGIP கடன் திட்டத்தின் கீழ் நிர்மானிக்க தீர்மானிக்கப்பட்ட வீதிகள் முறையாக சீர் செய்யப்பட வேண்டும். | சில வீதிகள் மீளமைக்கப்பட்டுள்ளன. முற்றைய வீதிகள் மீளளிக்க நடவடிக்கை எடுக்கப்படும். |
| ஊ. 2018 ஆம் ஆண்டுக்கான ஒப்பந்த வேலைகள் சம்பந்தமான கணக்காய்வினை மேற்கொண்ட போது 2017 ஆம் ஆண்டு நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சின் ஊடாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 12,251,670 தொகைக்கு SMA Careem Construcation (pvt) Ltd என்பவருடன் Concrete Drain with Cover Slab at mosque Road – Kattankudy வேலை செய்து முடிக்க ஒப்பந்தம் செய்யப்பட்டு சுமார் 450 மீற்றர் கான் வேலைகள் முடிக்கப்பட்டும் 300 மீற்றர் வேலைகள் இன்னும் முடிவுறுத்தப்படாமலும் காட்டப்படுகின்றது. செய்யப்பட்ட வேலைக்காக ரூபா 9,406,271 பகுதி கொடுப்பனவு 2017 டிசம்பர் 29 இல் செய்யப்பட்டுள்ள போதிலும் இதன் பின் ஏனைய இறுதி வேலைகள் மேற்கொள்ளப்படாது இன்றுவரை வேலை முடிவுறுத்தப்படாது பொது மக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு ஆழாகி வருகின்றனர். அதன் பின் 2018 ஆம் ஆண்டிலும் 2 கால நீடிப்புகள் வழங்கப்பட்டுள்ள போதிலும் 2019 மார்ச் 12 வரை | 2017 ஆம் ஆண்டு நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சினூடாக நிதி ஓதுக்கீடு செய்யப்பட்ட வீதி குறிப்பிட்ட ஒப்பந்த காலத்திற்குள் முடிவுறுத்தப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்ளப்பட்டது. |

| | | |
|---|---|---|
| வேலைகள் எதுவும் தொடங்கப்படவும் இல்லை, மேலும் தடையாக இருக்கும் மின் கம்பங்கள் இலங்கை மின்சார சபையால் அகற்றப்படாதிருப்பதும் வேலைகள் தாமதமடைவதற்கு ஒரு காரணியாக இருப்பதும் அவதானிக்கப்பட்டது. | | |

3.2 மனிதவள முகாமைத்துவம்

-----------------------------------

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **ஒப்பந்த அடிப்படையில் ஊழியர்கள் நியமனம் செய்தல்** | | |
| அங்கீகரிக்கப்பட்ட பதவியணியானது 39 உத்தியோகத்தர்களால் ஏற்கனவே விஞ்சப்பட்டிருந்த போதிலும் 25/2014 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து முன் அங்கீகாரம் பெறப்படாமலும் இது தொடர்பான நிதிகளை ஒதுக்கீடு செய்வதற்கான அங்கீகாரம் பெறப்படாமலும் உள்ளூராட்சி ஆணையாளர், கிழக்கு மாகாணம் அவர்களின் அனுமதியுடன் சபையின் வேண்டுகோளினை அடிப்படையாகக் கொண்டு மீளாய்வாண்டின் போது ஒப்பந்த அடிப்படையில் 39 ஊழியர்களை சபை நியமனம் செய்திருந்தது. இதனால் சபைக்கு மீளாய்வாண்டு காலப் பகுதியில் ரூபா 11,000,361 செலவீனம் மேலதிகமாக ஏற்பட்டிருந்தது. எனினும் அவ் ஊழியர்கள் நியமிக்கப்பட்ட வேலைகளில் அமர்த்தப்பட்டிருக்கவில்லை. | 25/2014 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து முன் அங்கீகாரம் பெறப்பட்டு ஊழியர் நியமிக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்பட்டது. |

3.3 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அ. சபைக்கு சொந்தமான ஆதனங்களை குத்தகைக்கு வழங்கும் போது குத்தகை ஒப்பந்தத்தில் பிணை ஆவணம் பெறப்படவேண்டும் என கூறப்பட்டுள்ள போதிலும், அத்தகைய ஆவணம் அல்லது பிணைப்பணம் பெறப்படுவதில்லை. இதனால், குத்தகைக்கு சொத்துக்களை பெற்றவர்கள் குத்தகைப்பணம் செலுத்த தவறும் பட்சத்தில் சபையானது வருமானத்தை இழக்கவேண்டி நேரிடலாம். | சபைக்கு சொந்தமான ஆதனங்களை குத்தகைக்கு வழங்கும் போது குத்தகை ஒப்பந்தம் பிணை ஆவணம் என்பன பெறப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்பட்டது. |

ஆ. நட்டங்கள் மற்றும் சேதங்களினை அறவிடுவதற்கு

(1) சபையின் கணக்காளரினால் மீளாய்வாண்டு சேகரிக்கப்பட்ட நிதியில் காசு சேகரிப்பு பகுதியில் இருந்து ரூபா 49,425 தொகை கையாளப்பட்டமை தொடர்பாக சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3.4 பாராளுமன்ற கணக்காய்வு குழு அறிக்கை

காத்தான்குடி நகர சபையின் 2017 ஆம் அண்டில் பாராளுமன்ற பொதுக் கணக்கு குழு அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டவற்றிற்கு இன்றுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. விபரம் பின்வருமாறு

(அ) கிண்ணியாவிற்கும் திருகோணமலைக்கும் இடையே பயணிகள் போக்குவரத்து சேவைக்காக பயன்படுத்தப்பட்ட படகு காத்தான்குடி கொக்கட்டிச்சோலைக்கான போக்குவரத்து சேவைக்குப் பயன்படுத்துவதற்காக ரூபா 323,550 கிரயத்தை செலவுசெய்து காத்தான்குடிக்கு கொண்டுவரப்பட்டிருந்ததுடன் காத்தான்குடி பிரதேச செயலகமும் இந்தப் படகின் திருத்தத்திற்காக ரூபா 489,500 தொகையை செலவிட்டிருந்தது. எவ்வாறாயினும், இது இன்றுவரை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1995 தொடக்கம் 2013 வரை உள்ளூராட்சி சபைகளின் ஓய்வூதியத் திட்டத்திற்கு செலுத்த வேண்டிய மாதாந்தப் பங்களிப்பு ரூபா 2,375,058 தொகையானது இன்றுவரை தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) போதியளவு அதிகாரத்தால் ஆதாரப்படுத்தப்படாத கொடுக்கல்வாங்கல்கள்

1992 இல் காத்தான்குடி நகர சபைக்கு அன்பளிப்புச் செய்யப்பட்ட ரூபா 600,000 பெறுமதியான நான்கு சில்லு உழவு இயந்திரமொன்று 2014 திசெம்பர் 31 வரை பயன்படுத்தப்பட்டிருக்காததுடன் இந்த உழவு இயந்திரத்தை திருத்துவதற்கு 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 315,203 கூட்டுமொத்தத் தொகையை சபை செலவிட்டிருந்தது. எவ்வாறாயினும், 2015 மே 10 ஆம் திகதிய 02/2015 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட நிபந்தனைகளை கருத்திற்கொள்ளாமல் சபையின் செயலாளரால் ரூபா 16,150 தொகைக்கே இது ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டிருந்தது.

(ஈ) ஒப்பந்த அடிப்படையில் ஊழியர்களை நியமனம் செய்தல்

அங்கீகரிக்கப்பட்ட பதவியணியானது 25 உத்தியோகத்தர்களால் ஏற்கனவே விஞ்சப்பட்டிருந்த போதிலும் 25/2014 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து முன் அங்கீகாரம் பெறப்படாமலும் இது தொடர்பான நிதிகளை ஒதுக்கீடு செய்வதற்கான அங்கீகாரம் பெறப்படாமலும் கிழக்கு மாகாண பிரதம அமைச்சரினால் மேற்கொள்ளப்பட்ட வேண்டுதலை அடிப்படையாகக் கொண்டு 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் போது ஒப்பந்த அடிப்படையில் 77 ஊழியர்களை சபை நியமனம் செய்திருந்தது.

மேலும், சபையால் பராமரிக்கப்பட்ட இரண்டு நூலகங்கள் மற்றும் நான்கு வாசிகசாலைகளிற்கான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 09 ஆக இருந்த போதிலும் அந்த நூலகங்கள் மற்றும் வாசிக சாலைகளிற்காக 11 அமைய ஊழியர்கள் உள்ளடங்கலாக 23 ஊழியர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தனர்.

(உ) பொதுச் சேவை சேமலாப நிதியத்திற்கான பங்களிப்பு அனுப்பப்படாமை

ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்தின் 2011 பெப்ரவரி 24 ஆம் திகதிய 2/2011 ஆம் இலக்கச் சுற்றறிக்கையின் பிரகாரம், அமைய மற்றும் தற்காலிக ஊழியர்களின் பங்களிப்பு பொதுச் சேவை சேமலாப நிதியத்திற்கு அனுப்பப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் போது நியமனம் செய்யப்பட்ட 77 ஊழியர்கள் தொடர்பான பங்களிப்பு அவர்களின் சம்பளங்களிலிருந்து கழிக்கப்பட்டு பொதுச் சேவை சேமலாப நிதியத்திற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை.

(ஊ) நூலகக் கட்டிடத்தை வாடகைக்குக் கொடுத்தல்

விலை மதிப்பீட்டுத் திணைக்களம் நூலகக் கட்டிடத்தின் மாதாந்த வாடகையை ரூபா 125,000 ஆக மதிப்பீடு செய்திருந்த போதிலும் 2014 ஆம் ஆண்டு 04 ஆண்டு காலப்பகுதிக்காக ரூபா 5,000 மாதாந்த வாடகையில் தனியார் கல்வி நிறுவகமொன்றிற்கு இந்தக் கட்டிடத்தை சபை வாடகைக்கு வழங்கியிருந்தது. இதன் விளைவாக, சபையானது ரூபா 4,755,000 வாடகை வருமானத்தை இழந்திருந்தது.

3.5 வாகனக் கொள்வனவு

------------------------------------

மீளாய்வாண்டு காலப்பகுதியில் சபையினால் ரூபா 4,550,000 பெறுமதியான மோட்டார் லொறி ரூபா 1,240,000 பெறுமதியான உழவு இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்ட போதிலும் அக் கொள்வனவின் போது அரச நிதி பிரமாண இல 41(2) நிதி அமைச்சின் 2016 மற்றும் 17 ஆந் திகதிய வரவுசெலவு திட்டத்தில் இல.1/2016 இன் பிரிவு 5.1 பெறுகை வழிகாட்டு 2.11.2 இற்கு அமைய பெறுகைக்கான அட்டவணை, கிழக்கு மாகாண செப்டெம்பர் 21 ஆம் திகதிய மாகாண நிதி சுற்றறிக்கை இல.07/04/2017 பந்தி 7.1 பெறுகை வழிகாட்டி 5.3.13(a) என்பன பின்பற்றப்படவில்லை.

3.6 வருடாந்த பொருள், இருப்பு மெய்மையாய்வு

---------------------------------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான வருடாந்த பொருள், இருப்பு மெய்மையாய்வானது நகர சபையினால் நியமிக்கப்பட்ட மூன்று உத்தியோகத்தர்கள் அடங்கிய மெய்மையாயவுக் குழுவினால் 2019 முதல் காலாண்டு காலப்பகுதியில் நடைபெற்றுள்ளதுடன் இதற்கான கொடுப்பனவாக ரூபா 6,000 தொகையும் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. இவ் மெய்மையாய்வு தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) வருடாந்த பொருள், இருப்பு மெய்மையாய்வு செய்வதற்காக நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் பொருட்களின் உண்மை இருப்பு நிலையை உறுதிப்படுத்தும் வகையில் இருப்பு பதிவேட்டுடன் ஒப்பிட்டு கணிப்பிடப்பட்டது என்பதை வெளிப்படுத்தும் வகையில் இருப்புபதிவேட்டில் அடையாளமிட்டு, உறுதிப்படுத்தி கையொப்பம் இடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்கான வருடாந்த பொருள், இருப்பு மெய்மையாய்வானது 2018 திசெம்பர் 31 ஆம் திகதியை அடிப்படையாக கொண்டு மேற்கொள்ள வேண்டும். மேலும், இத் திகதிக்கு பின்னர் நடைபெற்ற பெற்றுக்கொள்ளல் மற்றும் வழங்கள்ல்கள் தொடர்பில் சீராக்கங்கள் செய்யப்பட்டு இறுதி பொருள் இருப்பு கணிப்பிடப்படவேண்டிய போதிலும், இச்செயற்பாடுகள் தொடர்பில் கணிப்பிடுகள் கவனத்தல் கொள்ளப்படாது இருப்பு மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(இ) வருடாந்த பொருள், இருப்பு மெய்மையாய்வுக் குழுவினால் சான்றுறுதி செய்யப்பட்ட பொது 47 ஆம் படிவத்தில் “S” என அடையாளமிடப்பட்டு சுட்டிக்காட்டப்பட்ட பொருட்கள் தொடர்பில் கணக்காய்வுத் திகதியான 2019 ஏப்பிரல் 30 ஆம் திகதியில் மெய்மையாய்வு செய்தபோது இவ்வாறு அடையாளமிடப்பட்ட பொருட்களின் எண்ணிக்கையில் வேறுபாடு காணப்பட்டுள்ளது.

(ஈ) வருடாந்த பொருள், இருப்பு மெய்மையாய்வுக் குழுவினால் திறைசேரி மற்றும் கணக்காய்வு – 66 என்ற படிவத்தில் பயன்படுத்தப்படுகின்ற பொருட்கள் வெளிக்காட்டப்படவேண்டும். இருந்தும், இவ் மெய்மையாய்வுக்கு குழுவினால் மேற்படி படிவத்தில் வெளிப்படுத்தப்படவேண்டிய பொருட்கள் மற்றும் பொது 47 படிவத்தில் காட்டப்படவேண்டிய பொருட்கள் என பிரித்து மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. (உதாரணமாக) திருத்த முடியாத நிலையில் நீண்டகாலமாக பழுதடைந்த நிலையில் உள்ள 02 டிஜீட்டல் புகைப்படகருவிகளும் பவனையில் உள்ள கருவிகளாக கருதப்பட்டு மெய்மையாய்வில் வெளிக்காட்டப்பட்டள்ளது.

(உ) 2017 ஆம் ஆண்டு வருடாந்த பொருட் கணக்கெடுப்பு அறிக்கையில் காட்டப்பட்டுள்ளவாறு மடிக்கணனிகளான Head Office - Nelsip திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட 04, நிர்வாகப் பகுதி -02 ஆகியவற்றில் பயன்படுத்தப்படுகின்ற மொத்தமாக 06 மடிக்கணனிகளில் 3 மடிக்கணனிகள் மாத்திரம் கணக்காய்வு

பௌதீக பரீட்சிப்பின் போது காட்டப்பட்டது. மிகுதி 03 கணனிகள் (கணக்காளரிடம் காணப்படும் மடிக்கணனி உட்பட) வெளிக்காட்டப்படவில்லை.

(ஊ) 2017 ஆம் ஆண்டு வருடாந்த பொருட் கணக்கெடுப்பு அறிக்கையில் காட்டப்படுகின்ற 1000 லீற்றர் நீர்த்தாங்கி 04 காணப்படுவதாக குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும் கணக்காய்வு நடவடிக்கையின் போது இது வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(எ) 2017 ஆம் ஆண்டு வருடாந்த பொருட் கணக்கெடுப்பு அறிக்கையில் மோட்டார் சைக்கில்களும் (TVS BBU-2636 , Bajaj, UE-5492 ) ஆகியன காணப்படுகின்ற போதிலும் இரு மோட்டார் சைக்கிள்களும் எவ்வித அதிகாரமும் இன்றி கணக்காளரினால் UE-5492, வெளிக்கள வாகன தரிப்பு வருமான அறவீட்டாளரினால் TVS BBU-3626 பணன்படுத்தப்படுகின்றது.

(ஐ) நகர சபைக்கு சொந்தமான சில பொருட்கள் தனியாளரிடம் காணப்பட்டன. ஆவையாவன,

1. Suzuki 40 Hrs Power Engine – 01
2. Yamaha 40 Hrs Power Engine – 01
3. Yamaha 15 Hrs Power Engine – 01
4. Sucker Water Pump (Submersible Pump) – 01

(ஒ) நகர சபைக்கு சொந்தமான துருப்பிடித்த நிலையில் உள்ள Ferry மற்றும் Boat என்பன வாவிக்கரையில் பாவனை இன்றி காணப்படுகின்றன.

(ஓ) வாகனங்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் இடத்தில் டக்டர் இயந்திரத்தின் 5 இழுவைப்பெட்டிகள் மிகவும் பழுதடைந்த நிலையில் காணப்படுகின்றது. இதை திருத்துவதற்கோ அல்லது ஏலத்தில் விற்றுவிடுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3.7 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

---------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) தெருவிளக்கு கொள்வனவு மற்றும் வழங்கல்

---------------------------------------------------------------------------

I. பொது மக்கள், கௌரவ உறுப்பினர்களிடமிருந்து பெறப்பட்ட தேவைகளின் கோரிக்கைகளுக்கு அமைவாக விநியோகம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

II. நிதிப்பிரமாணம் 751(1) க்கு அமைவாக அரசாங்கத் திணைக்களங்களினால் பெறப்படும் இருப்புப் பொருட்கள் அனைத்தும் கிடைக்கப்பெற்றவுடனேயே பொறுப்பேற்கப்பட்டு உரிய ஆவணங்களில் பதவிடப்பட்டு முறையாக விநியோகிக்கப்பட வேண்டும் ஆயினும் இந் நடைமுறை பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

III. குறிப்பிட்ட காலப்பகுதியில் ஒவ்வொன்றும் ரூபா 3,750 பெறுமதியான 236, LED 50w Flood Light(Colr) கொள்வனவுக்காக ரூபா 885,000 செலவீனம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும் குறிப்பிட்ட LED 50w Flood Light(Colr) ஒன்று சந்தையில் ரூபா 2,350 க்கு கொள்வனவு செய்ய கூடியதாக இருந்த போதிலும் ஒரு மின்விளக்குக்கு ரூபா 1,400 மேலதிகமாக கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டு

மொத்தமாக ரூபா 330,400 சபையினால் மேலதிக கொடுப்பனவாக செலுத்தப்பட்டிருந்தது.

IV. குறிப்பிட்ட தெருமின் விளக்குகளுக்கான உத்தரவாத பத்திரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

V. குறிப்பிட்ட தெருமின் விளக்குகளின் பௌதீக கணக்காய்வின் போது கொள்வனவு செய்யப்பட்ட LED 50w Flood Light(Colr) களில் 37 தெருமின் விளக்குகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை

3.8 பெறுகை

--------------

3.8.1 பெறுகைத் திட்டம்

------------------------------

மீளாய்வாண்டிற்கான பெறுகைகள் திட்டமானது நகர சபையினால் வழங்கல்கள் மற்றும் சேவைகள் செயற்பாடுகளுக்காக தயாரிக்கப்பட்டிருக்க வேண்டும். இருந்தும், சபையினால் வழங்கல்களுக்காக ஒரு பெறுகைகள் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்காததுடன், சேவைகளுக்காக சபையினால் தயாரிக்கப்பட்ட பெறுகைகள் திட்டமானது தயாரிக்கப்பட்டதற்கான அடிப்படை ஆவணம், முன்மொழிவுகள், உள்ளுராட்சி மன்றங்களின் 4 வருட அபிவிருத்தி திட்டங்களின் முன்மொழிவுகளின் உள்ள சேவைகள் என்பன பின்பற்றப்படாது திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

-----------------------------------------------------------------

4.1 உள்ளகக் கணக்காய்வு

----------------------------------------

மீளாய்வாண்டில் சபையில் உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள் நடைபெற்றிருக்கவில்லை.